# வேட்பாளர்கள் சம்மதித்தால் தேர்தலை ஒத்திவைக்கலாம் என்கிறார் ஆணையாளர்

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களும் சம்மதிப்பார்களானால் தேர்தலை இப்போதைய சூழ்நிலையை கருத்தில்கொண்டு ஒத்திவைக்கலாம்; அல்லது பின்போடலாமென்று தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த த சில்வா கருத்து வெளியிட்டுள்ளார். நாட்டின் நிலைமை அடுத்த ஓரிரு தினங்களில் மேலும் மோசமடையுமானால், வேட்பாளர்களை நேரில் அழைத்து இதுபற்றித்தாம் ஆலோசனை நடத்த நேரிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். மக்கள் ஐக்கிய முன்னணி தூதுக்குழுவொன்று அதன் தலைவர் திரு தினேஷ் குணவர்த்தன தலைமையில் தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து, நாட்டின் நிலைமையை விளக்கி, சுதந்திரமாகவும் நேர்மையாகவும் தேர்தலை நடத்த முடியாதிருப்பதால் தேர்தலை ஒத்திவைக்குமாறு கேட்டது. தற்போதைய சட்டத்துக்கிணங்க அமைதியற்ற மாவட்டங்களில் தேர்தலை பின்

→ 6 ஆம் பக்கம் பார்க்க

விலை ரூபா இரண்டு பக்கங்கள் ஆறு

முரசொலி

தேசிய தமிழ்த் தினசரி

முரசு 3 ஒலி 18 வியாழன் 15-12-1988 (கார்த்திகை 30) ஜ. அவ்வல் 05

# தேர்தல் ஒத்திவைப்பு முடிவு நாளை மறுதினம் தெரியவரும்

## ஸ்ரீமாவோவுடன் ஜே. ஆர். ஆலோசனை; சனியன்று விசேஷ அமைச்சரவை கூட்டம்

தற்போதிருக்கும் சூழ்நிலையில் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாதிருப்பதால் அதனை ஒத்திவைப்பது சம்பந்தமாக ஜனாதிபதி ஜெயவர்த்தன முக்கியமான ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளார்.

நேற்று நண்பகல் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுடன் தனிமையில் பேசிய ஜனாதிபதி, அதற்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்காவுடனும் உரையாடினார்.

நேற்றுப்பிற்பகல் பல அமைச்சர்களுடன் இது சம்பந்தமாக ஜனாதிபதி மந்திராலோசனை நடத்தினார்.

நாளை மறுதினம் சனிக்கிழமை கூட்டப்படவுள்ள விசேஷ அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி இது பற்றி முடிவெடுப்பார் என்றும், அனேகமாக தேர்தல் ஒத்திவைப்பு சம்பந்தமான அறிவிப்பு இன்றுமாலை வெளிவரலாமென்றும் தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு. ரஞ்சன் விஜேரத்தின நேற்று செய்தியாளர் மத்தியில் பேசும் போது.

→ 6 ஆம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதி ஜெயவர்த்தன சொல்கிறார்

## புதிய ஜனாதிபதி கேட்டால் இந்திய படை செல்ல வேண்டும்

"இந்தியப்படையினரை வெளியேறுமாறு என்னால் கேட்க முடியாது. ஆனால் புதிதாகத் தெரிவாகும் ஜனாதிபதியினால் கேட்க முடியும். அவ்வாறு கேட்டால் அவர்கள் வெளியேறத்தான்வேண்டும்" என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நிருபர்களுக்களித்த பேட்டியில் இவ்வாறு

→ 6 ஆம் பக்கம் பார்க்க

## 150 மில்லியன் ரூபாவையும் மாத இறுதிக்குள் வழங்க முடியும்

யாழ் மாவட்ட மக்களுக்கு வழங்கவென இங்கு அனுப்பப்பட்ட நூற்றைம்பதுமில்லியன் ரூபாவையும் இம்மாத இறுதிக்குள் பொதுமக்களுக்கு குடும்பரீதியாக வழங்கும் நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அதிபர் எம். பஞ்சலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

முதலில் வந்தஎழுபத்தைந்து

→ 6 ஆம் பக்கம் பார்க்க

## ஜே. வி. பி. தளபதியும் தப்பினார்

வெலிகடை சிறையிலிருந்து தப்பியவர்களில் ஜே. வி. பி. இராணுவ தளபதியான ரகவாவுமே என்பவரும் ஒருவராவர்.

இவரை அடுத்த திங்கட்கிழமைக்கு முன்னர் சிறைக்குள் கொலை செய்யத் திட்டமிட்டிருந்ததாகவும் பேசப்படுகின்றது. மூன்று முக்கிய ஜே. வி. பி. தலைவர்கள் வெலிகடையிலிருந்து தப்பியுள்ளனராம்.

## ஸ்ரீமாவோ இன்று யாழ் வருகிறார்

திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா தேர்தல் பிரசாரத்துக்காக இன்று யாழ்ப்பாணம் வருகின்றார். நல்லூர் கந்தசுவாமி கோவிலில் வழிபாடு நடத்தும் அவர், பண்டத்தரிப்பு பனிப்புலத்தில் நடைபெறும் கூட்டத்தில் உரையாற்றுவார்.

## ஒஸி யாழ்நகரில்

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் பிரசாரக்கூட்டம் நாளை காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். திரு. அண்ணாமலை தலைமையில் நடைபெறும். கூட்டத்தில் திருவாளர்கள் ஒஸி அபேகுணசேகரா, வாசுதேவ நாணயக்கார, அமைச்சர் தயான் ஜெயத்திலக, டாக்டர் ராஜித சேனரத்ன உட்பட ஈ. பி. ஆர். எல் எப், ஈரோஸ், ஈ. என். டி. எல் எப்., ரெலோ பிரதிநிதிகளும் உரையாற்றுவர்.

## வவுனியா அரச அதிபராக பிரிகேடியர் ரஞ்சன் சில்வா

வவுனியாவின் புதிய அரசாங்க அதிபராக வவுனியா இணைப்பதிகாரி பிரிகேடியர் ரஞ்சன் த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார். இங்கு அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய திரு லங்காநேசன் உடனடியாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களாகவும் ராணுவ உயர் அதிகாரிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாராளுமன்றத் தேர்தலிலும் ஈ. பி. ஆர். எல். எப். போட்டியிடும்

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சகல தொகுதிகளிலும் போட்டியிட ஈழமக்கள் புரட்சிகர முன்னணி தீர்மானித்துள்ளது

இது தொடர்பாக மேற்படி முன்னணியின் வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்ததாவது :-

"இன்று தேசியரீதியாக நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் அரசு திண்டாடிக்கொண்டிருக்

→ 6 ஆம் பக்கம் பார்க்க

## வாக்களிப்பு நிலையங்களாக 160 பாடசாலைகள் தெரிவு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை மூன்றில் ஒரு மடங்கினால் குறைக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு மற்றும் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் ஊழியர்களின் போக்குவரத்து வசதி என்பவற்றை கருத்தில் கொண்டே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவ்விரு

→ 6 ஆம் பக்கம் பார்க்க

## குண்டுவெடிப்பில் காயமுற்ற சுண்டுக்குளி மாணவியும் மரணம்

கடந்த மாதம் ஒன்பதாம் திகதி யாழ். செயலகப்பகுதியில் இடம் பெற்ற கார்குண்டு வெடிப்பில் காயமடைந்து யாழ் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மற்றொரு மாணவி நேற்று முன்தினமிரவு மரணமானார்.

மிருசுவிலைச் சேர்ந்தவரும் சுண்டுக்குளி மகளிர்கல்லூரி

→ 6 ஆம் பக்கம் பார்க்க

# வெலிகடை சிறைச்சாலை ஜே. வி. பியினால் தகர்ப்பு; 228 கைதிகள் தப்பி ஓடினர்; சூடுபட்டு 2 ராணுவம் பலி

நேற்று முன்தினமிரவு வெலிகடை, மகஸீன் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஜே. வி. பி. தாக்குதல்களால் அவர்களின் ஆதரவாளர்களான 228 சிறைக் கைதிகள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு மணி நேரமாக தொடர்ச்சியாக இடம்பெற்ற குண்டுவெடிப்பு, துப்பாக்கிச் சூட்டு மோதல்களால் இரண்டு இராணுவத்தினரும், ஒரு சிறைக்கைதியும், ஜே வி. பி காரர் ஒருவருமாக மொத்தம் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். வனாத்தமுல்லை பகுதியில் வெலிகடை சிறையை நெருங்கிய சுமார் எண்பது பேரடங்கிய ஜே வி. பி. குழுவினர் குண்டு வைத்து சிறை மதில்களைத் தாக்கி, அதனை இரண்டாகப் பிளக்கச் செய்து அதனூடாக தங்கள் ஆதரவாளர்களை வெளியே கொண்டு சென்றனராம். சுமார் நான்கு மணி நேரம் சிறைச்சாலை இதனால் இருளில் மூழ்க நேர்ந்தது. சிறைச்சாலைப் பகுதியில் நேற்றிரவுவரை இருபத்திநான்கு மணிநேர ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. தப்பிய ஆறு சிறைக் கைதிகள் பிடிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

## சிறு விளம்பரம்

### கலண்டர்கள் டயரிகள்

மெய்கண்டான்,லீலா, ஆனந்தா, அஷ்டலக்ஷ்மி, தாளயன் கலண்டர்கள், வாக்கிய, திருக்கணித பஞ்சாங்க கலண்டர்கள் மற்றும் Observer, Sivali, உதயா, லீலா இன்னும் பலவகையான டயறிகள் விற்பனையாகின்றன. வியாபாரிகட்கு விஷேட கழிவு வழங்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 12142

### விற்பனைக்கு

''பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் அருளுரைகளிலிருந்து சில முத்துக்கள்'' அவரது 63-வது பிறந்ததின வெளியீடு. (சென்ற மூன்று ஆண்டுகளில் அவர் நிகழ்த்திய அருளுரைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை தொகுப்பு; திரு. செ. ஞானசேகரம். விலை ரூபா 15/- விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 12197

### தொழிற் பயிற்சி

Computer Programming ரெலிவிசன் வீடியோ டெக் றிப்பியறிங், வயறிங், ரீவைண்டிங் செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும் ஆரம்பம் 15.12.88 Jaffna Technical Institute ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம். 12248

### விற்பனைக்கு

பாவித்தவீட்டுத்தளபாடங்கள்ஹோல்செற்,செற்றி Show Case, கண்ணாடி மேசை, மேசைகள், Baby Cot, கட்டில் மெத்தைகள், மற்றும் பல பொருட்கள் உடன் மலிவு விலையில்விற்பனைக்குண்டு. திரு. மதியாபரணம் 158, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 12253

### புதிய வகுப்புக்கள்

ஆண்டு 10, 11 A/L 89 பகல் நேரவகுப்பு வெள்ளி ஆரம்பம்-16. 12. 1988 பி.ப 3 மணி Science Centre, Karaveddy. 12270

### விற்பனைக்கு

புதிய இங்கிலாந்து லிஸ்ரர் இஞ்சின் 7 இலக்க அலறையும், 12 இஞ்சி கிறைண்டரையும் இயக்கிக் கொண்டிருக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு K. சபாநாதன், சம்பந்தர் கடையடி, கரவெட்டி என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். 12277

### தேவை

K. S. B ரூர்ஸ் நிறுவனத்திற்கு நல்ல அனுபவமுள்ள டீசெல் மெக்கானிக் ஒருவரும், பஸ் கிளீனர் ஒருவரும் உடனடியாகத் தேவை. விண்ணப்பதாரிகள் நன்கு அனுபவமுள்ளவராக இருததல் வேண்டும். முன்பு வேலை செய்த இடத்திலிருந்து நற்சாட்சிப் பத்திரங்களுடன் 106, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குக் காலை 9 மணி முதல் பகல் 11 மணி வரை சமுகமளிக்கவும். 12284


# ஜனாதிபதி தேர்தலில் எவரையும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்காது

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடுநிலைமை வகிப்பது என அதன் தலைவர் ஜனப் எம்.எச் எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் எட்டாவது பேராளர் மாநாடு கொழும்பு சுககததாஸ அரங்கில் நடைபெற்ற போது ஜனப் அஷ்ரப் இத்தகவலை வெளியிட்டார்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் பலம் கிழக்கு மாகாணத்திலேதான் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் அங்கு நடுங்கிப் போயுள்ளனர்.

எமக்கென ஒரு முஸ்லிம் பெரும்பான்மை மாகாண சபையை பெற்றுக்கொள்ள நாம் ஒரு வழியைத்தேர்ந்தெடுத்துள்ளோம் எனவும் அவர் சொன்னர்.

## வாழ்க்கைத்திறன் கல்வி கருத்தரங்கு

இவ்வருடம் பாடசாலைகளில் வாழ்க்கைத்திறன் கற்பிக்கும் மற்றும் அடுத்தாண்டு கற்பிக்க ஆரம்பிக்கும் பாடசாலைகளின் அதிபர்களுக்கும், வாழ்க்கைத் திறன் கல்வி சம்பந்தமாக அண்மையில் நடைபெற்ற கருத்தரங்கில்கலந்துகொண்ட ஆசிரியர்களுக்குமான ஒருநாள் கருத்தரங்கொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியில் இன்றும் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நாளையும் இக்கருத்தரங்கு நடைபெறும். சம்பந்தப்பட்டவர்கள் தமக்கு அருகில் உள்ள ஏதாவதொரு நிலையத்தில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம் என தொழில் நுட்பக் கல்வி அதிகாரி திரு சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

## பெற்ரேல்விநியோகம்

யாழ் மடத்தடி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று பெற்ரேல் விநியோகிக்கப்பட்டது. இதேபோல் இன்றும் இந்த நிலையத்தில் பெற்ரேல் விநியோகம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


## வேலாயுதம் மகா வித்தியாலயம்

பருத்தித்துறை

உயர்தர வகுப்பில் அளவையியல் கற்பிப்பதற்குக் கலைப்பட்டதாரி ஆசிரியர் ஒருவர் தேவை. 25.12 88க்கு முன் விண்ணப்பிக்கவும்.

88 . 12 . 10. அதிபர்

12276

## MODERN Education Centre Karaveddy

ஆண்டு 4, 5, 6, 7, 8, 9

A/L 89, 90

ஆரம்பம்:

16. 12. 1988

வெள்ளி பி. ப. 3 மணி

12268

ஸ்ரீ ராம ஜெயம்

## திருமணசேவை

பெற்றேர்களே

உங்கள் பிள்ளைகளுக்கு தகுந்த மணமகன், மணமகள் தேவையா?

கவலையை விடுங்கள்

நேர்மையாகவும், நம்பிக்கையாகவும் தகுந்த முறையில் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

தொடர்பு

திருமண நிறைவேற்று நிலையம்

ராஜன் கனிமரத் தோட்டம்,

சாரையடி. புலோலி.

12275

## 'M' Three Travel

பெருமையுடன் வழங்கும்

உடனடி வேலைவாய்ப்புகள்

சவுதி

கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு

1) Mason – மேசன்
2) Carpenters – தச்சுத்தொழிலாளர்
3) Plumber – பிளம்பர்
4) Welder – வெல்டர்
5) Drivers Heavy Duty – பாரவாகன சாரதி
6) Generator Electricians – ஜெனறேற்றர் எலக்ரீசியன்
7) Generator Machanic – ஜெனறேற்றர் மெக்கானிக்
8) Packing Labourers – பக்கிங் தொழிலாளர்
9) University Cleaners – சர்வகலாசாலைத் தொழிலாளர்

நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

'M' Three Travel

- புதிதாகக் கடவுச்சீட்டு செய்ய விரும்புபவர்களுக்கு கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்
- எங்களிடம் புது கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினுல் உடனடியாக விஸா செய்து கொடுக்கப்படும்
- பொன்ட் (Bond) செய்து கொடுக்கப்படும்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

இந்திரபவனம்,
சோதிலேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

த. இந்திரநாதன்
No.1, 2-ம் ஒழுங்கை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

12305

## கட்டடம் அமைப்பதற்கான கேள்வி

யாழ் செஞ்சிலுவைச் சங்கம் பளை - வீமன்காமத்தில் அமைக்கவிருக்கும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டடத்திற்கு, கட்டட ஒப்பந்தக்காரரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விபரங்கட்கு:

யாழ். செஞ்சிலுவைச் சங்கம்

148, 1-ம குறுக்குத் தெரு,

யாழ்ப்பாணம்

12274

உ

சிவமயம்

## குரும்பசிட்டி அருள்மிகு முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்

மேற்படி தேவஸ்தானத்தினைப் புனருத்தாரணம் செய்வதற்குத்திருவருள் பாலித்துள்ளது. இப்பணியை இனிது நிறைவு செய்யுமுகமாக தேவஸ்தான பரிபாலன சபையின் 27-11-88-ம் திகதிய தீர்மானத்தினை அடியார்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கிறேன்.

(1) அம்பாள் ஆட்சிகொண்டிருந்த அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களில் யாராவது உரிமை பாராட்ட இருப்பின் அல்லது இவ்வாதனங்களில் எவற்றையேனும் தம் கைவசம் வைத்திருப்பின் இந்த அறிவித்தல் வெளியாகிய திகதியிலிருந்து 1 மாத காலத்திற்குள் எனக்கு அல்லது பரிபாலனசபையின் பொருளாளர் திரு. க. விஸ்வநாதன் அவர்களுக்கு அறியத் தரவும்.

(2) இன்று முதல் அம்பாள் திருப்பணி வேலைகளுக்கு நிதியாகவோ பொருளாகவோ காணிக்கை செலுத்த விரும்புவோர் அவற்றுக்குரிய பற்றுச் சீட்டினைப் பொருளாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். மாதாந்த, வருடாந்தவரவு செலவு அறிக்கைகள் தேவஸ்தான சுற்றுடலில் பகிரங்கப்படுத்தப்படும்.

(3) திருப்பணி வேலைகளுக்கு வரையாது வழங்கி அம்பாள் அனுக்கிரகம் பெற்றுய்யுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்

செ. ஈஸ்வரபாலன்

முகாமையாளர்

12267

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



சென்ற 18-11-1988 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் தாயார்

திருமதி

வர்ணமணி தர்பிராசா

அவர்களின்

அந்தியேட்டிக் கிரியை 16 - 12 - 1988 வெள்ளிக் கிழமை கீரிமலையிலும் வீட்டுக்கிருத்தியம் 18-12-1988 ஞாயிற்றுக்கிழமை பகல் எங்கள் இல்லத்திலும் நடைபெறும்.

இவ்வைபவங்களில் கலந்துகொண்டு அவரது ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகிறேம்.

5-ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

12283

நல்வாக்கு,

பிறர் விடுதலையை மறுப்பவர்கள் தாமும் அதற்கு உரிமையாகார்;
தெய்வ நேர்மையின்கீழ் அவர்கள் நெடுநாள் அதனை நுகரவும் மாட்டார்கள்.

-ஆபிரகாம் லிங்கன்

ஆர். ஜி. பில்டிங்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

# இதயநாதம்

## மிகப்பெரிய சிறையுடைப்பு

தென்னிலங்கைப் பயங்கரவாதம் அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று இந்த வாரத்தில் உச்சநிலைக்குச் சென்றுவிட்டது.

இந்த வாரத்தின் முதல் மூன்று நாட்களில் மட்டும் மொத்தம் அறுபத்தேழு சிங்களவர்கள் அங்கு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சிலவேளையில் இந்தத் தொகை இன்னமும் கூடுதலாகவும் இருக்கலாம்.

இப்போது தெற்கில் நடைபெறும் படுகொலைகளுக்கு ஜே. வி. பியைமட்டுமே காரணமென்று கூற முடியாது.

ஜே. வி. பி. உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்று கூறப்படுபவர்களும் பலர் கண்டகண்ட இடங்களில் சுட்டுக்கொல்லப்பட்டு வருகின்றனர்.

சரியாகப் பெயர் குறிப்பிடப்படாத ஒரு அமைப்பே ஜே. வி. பி.யின் உறுப்பினர், ஆதரவாளர்களைக் கொல்வதாக பரவலாகக் கூறப்படுகின்றது.

முன்னர் பச்சைப் புலிகள் என்ற பெயரில் இயங்கியவர்களே இப்போது பெயர் மாறி இயங்குவதாகவும், அரசாங்கத்தின் ஒரு துணை அமைப்பே இதுவென்றும் எதிர்க் கட்சிகள் தெரிவிக்கின்றன.

இதனை முற்றாக மறுப்பதற்குமில்லை.

இவ்வாறாக அங்குள்ள நிலையைப் பார்க்கும்போது அரச பயங்கரவாதம் தலைவிரித்துத் தாண்டவமாடுவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்து போன வருடங்களில் தமிழ்ப் பகுதிகளில் அரசாங்கமும், அதன் படைகளும் எவ்வாறு நடந்து கொண்டனவோ, அவ்வாறே இன்று சிங்களப் பகுதிகளில் நடந்து வருகின்றன.

ஒரு வகையில் பார்க்கும்போது, அப்பாவிச் சிங்கள மக்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றனரென்றே சொல்லத் தோன்றுகின்றது.

கொல்லப்படுபவர்களையெல்லாம் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டுவதில் ஜே. ஆர். அரசு பல வருட அனுபவம் பெற்றதாதலால், இன்று தெற்கில் கொல்லப்படுபவர்கள் யாராக இருக்கலாமென்பதை ஓரளவு ஊகித்துக் கொள்ளலாம்.

தெற்கில் நிலைமை மோசமடைந்து வருவதால் சுதந்திரமாக, நேர்மையாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

தற்போது நிலைமை சரியில்லாதிருப்பதால் ஜனாதிபதி தேர்தலைப் பின்போடலாம் என்று கொழும்பின் பிரபல ஆங்கிலத் தினசரியொன்று ஆசிரிய தலையங்கம் எழுதியுள்ளது.

இதற்கிடையில், சிறையுடைப்புச் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

ஒவ்வொரு சிறையுடைப்பிலும் தப்பிச் செல்பவர்கள் ஜே. வி. பி யினரே என்று அரசாங்கம் அறிவிக்கின்றது.

கடந்த மாதம் அடுத்தடுத்து இரண்டு சிறைச்சாலைச் சம்பங்கள் இடம்பெற்றுள்ளன.

இதன் பலனாக சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பான நீதி அமைச்சர் நிஸங்கா விஜேரத்னவும், பிரதி நீதி அமைச்சர் ஷெல்ரன் ரணராஜாவும் பதவிவிலகினார்கள்.

புதிய நீதி அமைச்சராக திரு.போல் பெரேரா நியமிக்கப்பட்ட இரண்டு வாரத்துக்குள் மிகப் பெரிய சிறையுடைப்பு இடம பெற்றுள்ளது.

அதுவும் கொழும்பு நகரப் பகுதியுள், ஜனாதிபதியின் வார்ட் பிளேஸ் வாசஸ்தலத்திலிருந்து அரைமைல் தூரத்திலுள்ள வெலிக்கடை சிறைநேற்றுமுன்தினமிரவு குண்டுகளால் தாக்கப்பட்டு, உடைக்கப்பட்டுள்ளது.

ஏறத்தாழ இருநூறு ஜே.வி.பி. பயங்கரவாதிகள் இங்கிருந்து தப்பிவிட்டனராம்.

இது அரசாங்கத்தின் ''பாதுகாப்புச் சேவைத் திறமை'' யை எடுத்துக் காட்டப் போதும்.

இந்தச் சம்பவத்துக்காக அரசாங்கத்தையே கலைத்தாலும் போதாது!

புதிய நீதி அமைச்சர் போல் பெரேரா என்ன செய்வாரோ?.

சில சமயம் ''கதிரை ஆசை''யால் மௌனமாகவும் இருந்து விடலாம்!

# நவீனவிஞ்ஞானரஷ்யாவினால் ஆர்மீனிய நகர பூகம்பத்தை அறியமுடியாதது ஏன்?

சோவியத் யூனியனின் ஆர்மீனியக் குடியரசில் கடந்த ஏழாந் திகதி நிகழ்ந்த பூகம்பத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புக்களையும் அழிவுகளையும் கண்டு உலகமே அதிர்ச்சியடைந்துள்ளது.

இப்பூகம்பத்தினால் இறந்தவர்கள் பற்றிய சரியான தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. முதலில் வெளிவந்த செய்திகள் இப்பூகம்பம் ஒரு இலட்சம் பேரைப் பலிகொண்டு விட்டதாகக் கூறின, இப்போது கிடைத்துள்ள செய்திகள் எழுபது இலட்சம் வரையிலான மக்களை இப்பூகம்பம் பலிகொண்டு விட்டதாகவும் பன்னிரெண்டு ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயம் அடைந்துள்ளதாகவும் ஐந்து இலட்சம் மக்கள் வீடுவாசல்களை முற்றாக இழந்துள்ளதாகவும் தெரிவிக்கின்றன. இத்தகவல்களிலும் மாற்றம் ஏற்படலாம்.

அஸர்பைஜானில் இருந்து பெருமளவு அகதிகள் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட நகர்களுக்கு வந்திருந்ததனால் துல்லியமான தகவல்களைப் பெறுவது கடினமாகியுள்ளது.

ஆர்மீனியாவின் இரண்டாவது பெரியநகரமான லெனினகானின் பெரும்பகுதி அழிந்துவிட்டது. இந்த நகரில் 2,20,000 மக்கள் வசித்து வந்தனர். ஆர்மீனியாத் தலைநகர் யெரவானுக்கு எண்பது கிலோ மீற்றர் தூரத்திலுள்ள 'ஸ்பீடாக்' என்ற நகரம் முற்றாக அழிந்து மண்மேடாகக் காட்சி தருகின்றது. இந்த நகரத்திற்கே அஸர்பைஜானிலிருந்து ஆர்மீனிய அகதிகள் பெருந்தொகையாக வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பூகம்பம் பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டதும் அமெரிக்க விஜயத்தை இடைநிறுத்திவிட்டு தாயகம் திரும்பிய ஜனாதிபதி கொர்பச்சேவ் மீட்புப் பணிகளையும், உதவிப் பணிகளையும் நேரடியாகப் பொறுப்பேற்றுக் கவனிக்க கடந்த பத்தாந் திகதி ஆர்மீனியா சென்றார்.

### உலகநாடுகள் உடனடி உதவி

சோவியத் செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்து உலக நாடுகள் பலவற்றில இருந்தும் உலக நிவாரண ஸ்தாபனங்களிடம் இருந்தும் உதவிப் பொருட்கள், மருந்துகள், கூடாரங்கள் என்பனவற்றுடன் வைத்தியர்கள், மீட்புப் பணியில் நிபுணத்துவம் பெற்றவர்களும் ஆர்மீனியாவிற்கு சென்றுள்ளனர்.

பிரான்ஸ் அரசு உதவிப் பொருட்கள் உட்பட காணாமற் போனவர்களைத் தேடிப் பிடிப்பதில் தேர்ச்சி பெற்ற நாய்களையும், டாக்டர்களையும் அனுப்பி வைத்துள்ளது.

பிரிட்டன் இடிபாடுகளுக்குள் சிக்குண்டு இருப்பவர்களை கண்டுபிடிப்பதில் உதவும் கருவிகளுடன் மிகத் திறமை மிக்க லண்டன் தீயணைப்புப் படைப் பிரிவையும் அனுப்பி வைத்துள்ளது.

இத்தீயணைப்புப் படையினர் 1985 ஆம் ஆண்டு மெக்சிக்கோ நகரத்தில் நிகழ்ந்த பூகம்பத்தில் இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்களை மீட்டு எல்லோரதும் பாராட்டைப் பெற்றவர்களாவர்.

இக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கும் போது கிடைத்த தகவல்களின் படி இதுவரை 2850 பேர்களை இப்படையினர் மீட்டுள்ளனர். மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் இரவு பகலாக ஓய்வின்றி இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### ஒரு சிறுமியின் 'தண்ணீர்' கதறல்

ஸ்பீடாக் நகரத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இடிபாடுகளுக்குள் சிக்குண்ட ஒரு சிறுமி தண்ணீர்... தண்ணீர் என்று கதறியதை கண்ணுற்ற மீட்புப் படையினர் அந்தப் பரிதாபத்தைக்கண்டு கதறி அழுதனராம். பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட நகரங்களை பார்க்கின்றபோது கதறி அழவேண்டும் என இருப்பதாக அங்கு சென்றுள்ள பி. பி சி நிருபர் தெரிவித்தார்.

ஆர்மீனிய நகர் பார்க்கின்றபோது விமானங்கள் வருகின்றன. அவசரமாக செல்கின்றன மீட்புப் பணிக்காக நவீன கனரக வாகனங்கள் வந்து தமது பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை தொடர்ச்சியாக விமானங்கள் வந்த வண்ணம்தான் இருக்கின்றது. உதவிப் பொருட்களும் வந்து கொண்டுதான் இருக்கின்றது.

செல்வ உதயன்

மக்கள் வீதி ஓரங்களிலும், மைதானங்களிலும்பொழுதை வேதனையுடன் கழிக்கின்றார்கள் மக்கள் எல்லோருக்கும் ஏதோ ஒருவிதத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அநாதைகளான குழந்தைகள், தாய், தந்தையரை தேடிக் கதறுகிறார்கள் தாய் மகனை தேடுகிறாள். கணவன் மனைவியைத் தேடுகிறான். இப்படியான பரிதாபங்கள் தொடருகின்றன.

'அம்புலன்ஸ்' வண்டிகள் வரிசையாக வந்த வண்ணம் இருக்கின்றன. மக்கள் வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகின்றார்கள். சோவியத் யூனியனின் ஏனைய குடியரசுகளில் இருந்து உதவிப் பொருட்களைச் சுமந்து கொண்டு விமானங்கள் சோகத்துடன் இறங்குகின்றன.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட இடத்தில் மீட்புப்பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின முகங்களில் சோகம், கற்பனை பண்ணிடபார்க்க முடியாத சோகத்தை இந்தப் பூகம்பம் ஏற்படுத்தி விட்டது என்று அமெரிக்க 'ரைம்ஸ்' நிருபர் தெரிவித்தார். கடந்த பத்தாந்திகதி சோவியத் யூனியன் முழுவதும் இச்சம்பவத்திற்காக துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

### ஒரு நிருபரும் கலங்கினார்

அநாதைகளானோரை தத்தெடுக்க பல சோவியத் மக்கள் முன் வந்துள்ளனர். காடியன் நிருபர் அழுது கொண்டு நின்ற சிறுவனைப்பார்த்து 'தம்பி' அழாதே என்னுடன் வா என்றார். அதற்குச் சிறுவன் என்னுடைய அப்பாவையும் அம்மாவையும் கூட்டிக்கொண்டு வருகின்றீர்களா? இரண்டு நாட்களாக அம்மாவையும் அப்பாவையும் தேடுகின்றேன் நாங்கள் வாழ்ந்த இடத்தைக் காணவில்லை. அந்த இடம் எங்கே போய்விட்டது என்று கேட்டான். காடியன் நிருபரால் பதில் சொல்ல முடியவில்லை. அவருடைய கண்களே கலங்கிவிட்டன.

மிகவும் வசதிகளைக் கொண்ட சோவியத் யூனியனால் ஏன் இந்த பூகம்பத்தைப் பற்றி முற்கூட்டியே அறியமுடியவில்லை. ஆர்மீனியர்களை பழிவாங்க நினைத்தார்களா? ஆர்மீனிய, அஸர்பைஜான் மக்களின் பிரச்சனைக்கு தீர்வுகாண இதுதான் வழி என்று நினைத்தார்களா? இப்படியான கேள்விகள் உலக மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

ரஷ்ய விண்வெளிக்கோள் ஒன்று பூகம்பம் ஏற்படுவதற்கான அறிகுறிகளையும் அதன் தொடர்பான பூகோளப்பகுதியையும் ஐந்துமணி நேரத்திற்கு முன்னமேயே தகவல் சேகரித்து சமிக்கைகளை வெளியிடக் கூடியது. இந்த விண்கோள் பூமியின் பக்கங்களில் மேலோட்டில் ஏற்படும் கதிர் வீச்சு வெடிப்புக்கள் மூலம் பூமியின் கீழ் மட்ட அதிர்வுகளை முன்னதாகப் பதிவு செய்யும் கருவிகளைக் கொண்டுள்ளது இந்தக் கருவி ரஷ்யாவின் ''காஸாக்'' விஞ்ஞானக் கழகத்துடன் இணைந்தபூகம்பஇயல் ஆராய்ச்சிப்பிரிவின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது என்பதை சுட்டிக் காட்டுதல் பொருந்தும். நவீன வசதிகள் உள்ள ரஷ்யாவில் இப்படியான பூகம்பத்தை அறிய முடியவில்லை என்பது உலக அவதானிகளுக்கு வியப்பை உண்டு பண்ணியுள்ளது.

அஸர்பைஜானில் வாழ்ந்த ஆர்மீனியர்களை அஸர்பைஜானியர்கள் தாக்கியதால் ஆயிரக்கணக்கானவர்கள் அஸர்பைஜானை விட்டு ஆர்மீனியாவிற்குச் சென்றார்கள் ஆர்மினியர்கள் அஸர்பைஜானியர்களால்பட்டதுன்பங்கள்சொல்ல முடியாதவை. அவர்கள் நிம்மதியின்றி வாழ்ந்தார்கள். நிம்மதியையும் பாதுகாப்பையும் தேடி ஆயிரக்கணக்கான ஆர்மீனியர்கள் ஆர்மீனியா சென்றார்கள். அவர்கள்சென்று தங்கிய 'ஸ்பீடாக்' நகரம் முற்றாக அழிந்து விட்டது.

நிம்மதி இன்றி வாழ்ந்த ஆர்மீனிய மக்களை இங்கு இருக்க வேண்டாம். நிரந்தர அமைதியை நான் தருகின்றேன் என இறைவன் பூகம்பம் மூலமாக அவர்களை அழைத்து விட்டானோ!

### திருவெம்பாவை உற்சவம்

காரைநகர் சிவன்கோவிலில் இன்று பதினைந்தாம் திகதி திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களும் நடைபெறவுள்ளது. கோவில் 'பாலஸ்தாபனம்' செய்யப்பட்டுஇருப்பதினால் உற்சவ மூர்த்திகள் திருவீதியுலா வருவது தவிர்ந்த மற்றைய அபிஷேகம், பூசை, திருவெம்பாவை ஓதல் என்பன வழமைபோல் நடைபெறும்.

## யாழ். கிளை கூட்டத்தில் தலைவர் உரை

# மருந்துக் கலவையாளர்களின் உரிமைக்காக சங்கம் தொடர்ந்து பாடுபடும்

(சங்கானை)

''மருந்துக்கலவையாளர்கள் தங்கள் புதிய தொழில் நுட்ப வியலாளர் தரத்திற் கேற்ற உரிமைகளை பெறுவதற்கு எமது தாய்ச் சங்கம் பல்வேறு கோரிக்கைகளை சுகாதார அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது. எமது உரிமைகள் கிடைக்கும்வரை சங்கம் தொடர்ந்து பாடுபடும்.

இவ்வாறு அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். பிரதேசக் கிளையின் 16-ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில் கிளையின் தலைவர் திரு. சி. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

யாழ். நகரிலுள்ள பொண்ட் கல்வி நிலையத்தில்நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்திலிருந்தும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்தும் பெருந்தொகையான மருந்துக் கலவையாளர்கள் கலந்து கொண்டனர்.

கிளைச்சங்க செயலாளர் திரு. என். எம். கந்தசாமி உரையாற்றுகையில் கடந்த காலத்தில் பதட்டமான சூழ்நிலை நிலவிய போதிலும் சங்க உறுப்பினர்கள் தெரிவித்த குறைபாடுகள்பற்றி யாழ் சுகாதார திணைக்கள அதிகாரிகளுடன்பேச்சு வார்த்தைநடாத்தி தீர்த்து வைத்துள்ளது என்றும், மருந்துக்கலவையாளர்களின் முன்னேற்றத்திற்கு கிளைச்சங்கம் தொடர்ந்தும் சேவையாற்றி வரும் என்றும் அனைவரதும் ஒத்துழைப்பும் ஆதரவும் எமக்கு அவசியமானது என்றும் குறிப்பிட்டார்.

பளை அரசினர் வைத்தியசாலை மருந்துக்கலவையாளர் திரு. ஏ. சச்சிதானந்தன், தாய்ச்சங்க உபதலைவரும், வட்டுக்கோட்டை அரசினர் மருந்துச்சாலை மருந்துக்கலவையாளருமான திரு. எஸ். சற்குணம், வரணி அரசினர் மருந்தக மருந்துக் கலவையாளர் திரு. கே. குணலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

புதுவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்ற போது பின்வருவோர் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. சி. திருநாவுக்கரசு, செயலாளர்: திரு. என். எம் கந்தசாமி, பொருளாளர்: திரு. ஐ. அருளானந்தம்.

---

## கல்விப்பணிப்பாளர் சபாநாயகம் உரை

# ஆசிரியரை தெய்வமாக எண்ணி பெருநிலையை அடைவோம்

(திருநெல்வேலி)

''இந்தப் பாடசாலை நீண்டகால வரலாறு படைத்தது. பல கல்விமான்களையும், சீரிய பிரஜைகளையும் உருவாக்கியது. எனது முன்னறி தெய்வமான எனது அன்னையார் திருமதி வெற்றிவேலு அவர்களிடம் இங்குதான் எனது ஆரம்பக் கல்வியைப் பெற்றேன். இதன் சீரிய பாரம் பரியத்தின்படி நாம் எமது ஆசிரியர்களைத் தெய்வமாகவே மதிசது அவர்களின் அறநெறி முறைகளைக் கடைப்பிடித்து பெருநிலையை அடைந்தோம். இதன்பாரம்பரியத்தை இன்றும் இங்கு பேணப்படுவதுகண்டு பெருமிதமடைகின்றேன்.''

இவ்வாறு யாழ். திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் நடத்தப்பட்ட வருடாந்தபரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் கூறினார்.

வித்தியாசாலை அதிபர் திரு. சி. வைகுந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திருமதி புஷ்பவதி சபாநாயகம் பரிசில்களை வழங்கினார்.

யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. கே. கந்தசாமி அவர்கள் தனது சிறப்புரையில்—யாழ் மாவட்ட பிரதம பாடசாலைகளுள் ஒரு உயரிய பாடசாலையாக இப்பாடசாலை இன்றும் பணிபுரிந்து வருகின்றது போற்றப்பட வேண்டியதே. உண்மையில் இத்தகைய பிரதம பாடசாலைகளில அத்திபாரமான கல்விச் சேவையிலேயே எமது பகுதி மாணவர்களின் உயர்கல்வி பெரிதும் தங்கியுள்ளது என்றார்.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி தனது உரையில்— இங்குள்ள ஆசிரியர்களும் அபிவிருத்திச் சபையும் ஒன்றிணைந்து தொண்டாற்றுவது முன்மாதிரியாகவுள்ளது. தியாக உணர்வுடன் தம் பணியை இங்கு ஆசிரியர்கள் செய்து வருவதனால் புலமைப் பரிசில்கள், போட்டிப் பரீட்சைகளில் இப்பாடசாலை முன்னணியில் இருந்து வருகின்றது என்றார்.

இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகள் பல இடம்பெற்றன. திரு. ந. மகேஸ்வரன் நன்றியுரை வழங்கினார்.

---

## யாழ். மாவட்டத்திலுள்ள

# சனசமூக நிலைய வளர்ச்சிக்கு சமாச ஒன்றியம் புதிய திட்டம்

(காவலூர்)

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் வளர்ச்சிக்கான புதிய திட்டமொன்று யாழ்மாவட்ட சனசமூகநிலைய சமாச ஒன்றியத்தினால் வகுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது தொண்டர் ஸ்தாபனங்கள் வெளிநாட்டு தூதாகங்கள் மூலம் இதற்கான நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு நஷ்ட ஈடுகள் பெற்றுக் கொடுக்கவும், வளர்ச்சி குன்றிய சனசமூக நிலையங்களை அபிவிருத்தி செய்யவும், சனசமூக நிலைய நிர்வாகிகளுக்கு சமூக சேவை முகாமைத்துவம் ஆகிய பயிற்சிகளை வழங்கவும், நூலகங்களுக்கு நூல்களைப் பெற்றுக் கொடுக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

1989-ம் ஆண்டில் யாழ் மாவட்டத்தில் உள்ள சகல சனசமூக நிலையங்களையும் புனரமைக்கவும் இதனூடாக சமாச ஒன்றியச் செயற்பாடுகளை விஸ்தரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# தென் இந்தியதிருச்சபையின் இலவச பாலர் பாடசாலை

(காவலூர்)

தென் இந்திய திருச்சபையினர் வேலணைஆலயமூடாக இலவச பாலர் பாடசாலையொன்றை நடத்தவுள்ளனர். இப்பாடசாலையில் அறுபது வசதியற்ற குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர் மூன்று, நாலு வயதுடைய பிள்ளைகள் இப்பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். இப்பிள்ளைகளுக்கு இலவசமாக உணவு, உடை, பாடப் புஸ்தகங்கள் என்பன வழங்கப்படவும் உள்ளன.

தென் இந்திய திருச்சபையினர் வேலணை ஆலய மூடாக கடந்த காலவன் செயல்களினால் பாதிக்கப்பட்ட அகதி மக்களுக்குபல நிவாரணங்களை வழங்கியதுடன் இலவச கல்வியையும் அளித்து வருவது குறிப்பிடத்தக்கது. மேற்படி இலவச பாலர் பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள விரும்புவோர் ஆலய சபை உறுப்பினர் திரு. விக்டர் செல்வம் அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளும்படிகேட் கப்படுகின்றார்கள்

---

## புதிய கோவில்

(சித்தன்கேணி)

கல்லுண்டாய் வீதியில் கற்பக விநாயகர் கோவில் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்லுண்டாய் வைரவர் கோவிலுக்கும் உப்பளத்திற்கும் இடையில் வீதியின் தெற்குப்பக்கமாக கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கோவிலுக்கு மண்டபம் ஒன்று அமைப்பதற்காக உண்டியல் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது

## அரசாங்க 'செக்' 90 நாட்களுக்கு செல்லுபடியாகும்

அரசாங்கத்தால் வழங்கப்படும் காசோலைகள் செல்லுபடியாகும் கால அவகாசம் தொண்ணூறு நாட்களாக நீடிக்கப்பட்டுள்ளது. இதுவரைகாலமும் அரசாங்கத்தால் வழங்கப்படும் காசோலைகள் முப்பதுநாட்களே செல்லுபடியாகும் காலஅவகாசமாக இருந்தது. தபால்போக்குவரத்து தாமதம் வங்கிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக ஒரு மாத காலத்தில் காசோலைகளை மாற்றிக் கொள்ள முடியாதிருப்பதையடுத்து அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி

(காவலூர்)

அண்மையில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசுப் பரீட்சையில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் கல்விகற்கும் நான்கு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். வேலணை கொத்தணி அமைப்பின் கீழ் உள்ள பாடசாலைகளில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மாணவர்களே கூடுதலாக சித்தியடைந்துள்ளார்கள்.

## புதிய கட்டடம்

(காவலூர்)

வேலணை தென்னிந்திய திருச்சபை ஆலயவளவினுள் புதிதாக பாலர்பாடசாலைக் கட்டட மொன்றுகட்டப்பட்டு வருகின்றது. தென் இந்திய திருச்சபை இக்கட்டடத்தை கட்டுவித்து வருகின்றது. தைமாதம் முதல் வாரத்தில் இக்கட்டடத்தில் பாலர் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுமென மேற்படி ஆலய உறுப்பினர் திரு. விக்டர் செல்வம் தெரிவிக்கின்றார்.

---

# முப்பத்தோராம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 23-05-1904

மறைவு: 15-11-1988

## மேரி ஜோசபீன் கிறிஸ்ரியன்

[மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்]

எங்களையெல்லாம் அன்புடன் வளர்த்து ஆளாக்கிய அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைப் பிரிந்தாலும் உங்கள்நினைவு என்றும் எங்கள்நெஞ்சில் நிலைத்திருக்கும்.

● அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 16-12-88 வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சிமாதா கோவிலில் பலிப்பூசை ஒப்புக் கொடுக்கப்படும். உறவினர்களும், நண்பர்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

12242


## பிரயாண ஒழுங்குகள்

★ Taiwan ★ Saudi
★ Kuwait ★ Germany

AIR PORT CLEANERS
SAUDI SAFARI COMPANY
[3 வருட ஒப்பந்தம் சம்பளம் 4000/-]

SAUDI House Maid
(சம்பளம் 3000/-)

579, Overseas Travels
86. Nallur Market,
Point Pedro Road,
Kalviankadu, Jaffna
[எரிபொருள் நிலையம் முன்பாக]
12262

## Niru Tuition Centre
Kondavil

89 பௌதிகவியல்
புலங்கள் செவ். வியா. 3 - 4
இன்று - ஒலி (Sound) செவ். வியா. 4-5
திரு. சௌந்தி B. Sc. (Hons)
90 ஒளியியல்
சனி, ஞா. 9-10
12219

## மலைக்கோட்டை ரவல்ஸ்

நம்பிக்கை, நாணயம், துரிதசேவை
★ ஜேர்மன் பயணம் ★
வெளிநாட்டு பயண அமைப்பாளர்
P. சிவபாதலிங்கம்
No. 9 அரசடி ஒழுங்கை
தட்டாதெரு யாழ்ப்பாணம்
12245

தேர்தல் திகதி அறிவிப்பையடுத்து வன்னியர்கள் போர்க்கொடி

# தமிழகத்தில் இன்று ஹர்த்தால்

# ராணுவம் அழைக்கப்பட்டது!

தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கான இட ஒதுக்கீட்டில் அதிருப்தியடைந்துள்ள வன்னியர் சமூகத்தவர்கள் வீதி மறிப்புப் போராட்டங்களை புதிதாக ஆரம்பித்துள்ளதையடுத்து தமிழகத்தில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் இன்று பூரண கர்த்தால் அனுஷ்டிக்குமாறு வன்னியர்கள் அழைப்பு விடுத்துள்ளதையடுத்து பெருமளவு ராணுவமும் பொலிஸாரும் பாதுகாப்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் வேலைவாய்ப்பு, கல்வி வசதி போன்றவற்றில் சனத்தொகை அடிப்படையில் தமக்கு இருபது சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று வன்னியர்கள் நீண்டகாலமாகப் போராடி வருவது தெரிந்ததே. எனினும் அரசாங்கமோ அரசியல் கட்சிகளோ இக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் தமிழகத் தேர்தலில் எந்த ஒரு கட்சியையும் ஆதரிக்காமல் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என வன்னியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தஞ்சாவூர், தென்ஆற்காடு, செங்கல்பட்டுமாவட்டங்களில் வன்னியர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த போராட்டத்தால் அப்பகுதியில் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது. வீதிகளைத் தடை செய்யும் விதமாக மரங்கள் வெட்டப்பட்டு போடப்பட்டுள்ளன. இதனையடுத்து வன்செயல்களை தூண்டிவிட்ட குற்றச் சாட்டில் நூற்றுக் கணக்கானோர் இங்கு கைதாகியுள்ளார்கள். பல பஸ்கள், வாகனங்களும் எரிக்கப்பட்டுள்ளன.

## சோவியத்திலுள்ள பொருளாதாரத் தீமைகளை எதிர்பார்த்தளவு விரைவாக நீக்கிவிடமுடியாது

(லண்டன்)

''இந்தப் பொருளாதாரச் சீர்திருத்தம் நெடுங்காலத்துக்கு முன்பே 30 ஆண்டுகளுக்கு முன்பே வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நான் கருதுகின்றேன். எனவே, இன்று நாம் காணுகிற பொருளாதாரத் தீமைகளை அவ்வளவு சீக்கிரமாகக் களைந்துவிட இயலாது.''

சோவியத் யூனியனில் நிகழ்ந்து வரும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் குறித்து, பிரபல சோவியத் பொருளாதார நிபுணர் ஆட்டோ லாசிஸ் இவ்வாறு கூறினர்.

தற்போதைய கட்டத்தில், நாம் ஒரு மாறிச் செல்லும் காலகட்டத்தையே கடந்து கொண்டிருக்கிறோம். இது 1990 இறுதியில் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் விலைச் சீர்திருத்தம் கொண்டு வரப்படவில்லை. மொத்த வார்த்தகம் நடைமுறைக்கு வரவில்லை. எனவே பொருளாதாரப் புதுமைகளின் விளைவுகளை நடைமுறையில் காண்பதற்கு இன்னும் சில ஆண்டுகள் ஆகும்.

இப்போதும் கூட முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன உதாரணமாக, நஷ்டத்தில் இயங்கி வந்த எலாபக் தொழிற்சாலை இனி டிரக்டர்களுக்குப் பதிலாக பொறியியல் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற முடிவு மக்கள் தந்த நிர்ப்பந்தத்தால் இரத்து செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சிரமங்களைத் தீர்ப்பதற்கு வலுவான நடவடிக்கைகளை எடுக்க வாய்ப்பு உள்ளது. சந்தை. சொந்தமாக விலைகளைத் தீர்மானிப்பதற்கு அனுமதிக்க வேண்டும். நிர்வாக அமைப்பைச் சீரமைப்பதற்கு அதிக உறுதிப்பாடு காட்ட வேண்டும். பொருளாதாரத்தை புதிய வழியில் நடத்துவதற்கு அடிப்படையிலேயே மாறுபட்ட பல அமைப்புகள் தேவைப்படுகிறது எனவும் சோவியத் பொருளாதார நிபுணர் ஆட்டோ லாசிஸ் கூறினர்.

ஜெனிவா மாநாட்டில் அரபாத் அறிவிப்பு

# மேற்காசியப் பிரச்சனைக்கு

# மூன்றம்சத் திட்டத்தில் தீர்வு

பலஸ்தீன மக்களின் சுதந்திரப் போராட்டம் உட்பட மேற்காசியப் பிரச்சனைகளின் தீர்வுக்காக மூன்றம்ச சமரசத் திட்டமொன்றை பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் முன்வைத்துள்ளார். ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள பலஸ்தீன பிரச்சனை தொடர்பான ஐ.நா சபையின் மாநாட்டில் உரையாற்றுகையிலேயே பிரதிநிதிகளின் பலத்த ஆரவாரத்திற்கு மத்தியில் இப்புதியதிட்டத்தை அவர் முன்வைத்தார்.

ஐ நா சபையின் மேற்பார்வையில் தீர்மானம் 242,338 ஆகியவற்றிற்கு இணங்க பலஸ்தீன பிரச்சனை தொடர்பான சர்வதேசமாநாடுநடத்தவேண்டும். ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலஸ்தீன பகுதிகளில் ஐ நா. சமாதானப் படை நிறுத்தப்பட்டு இஸ்ரேலியப் படையின் வெளியேற்றத்தை கண்காணிக்க வேண்டும் இஸ்ரேல் பலஸ்தீனம் உட்பட இப்பகுதியிலுள்ள அனைத்து நாடுகளினதும பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பனவே அரபாத் முன்வைத்துள்ள மூன்றம்சத் திட்டமாகும்.

தன் வாழ்நாளில் முதன் முதலாக இஸ்ரேல் என்றொரு நாடு இருப்பதை பெயர் குறிப்பிட்டு ஏற்றுக் கொண்ட யாஸிர் அரபாத், மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்த பிரச்சனையுடன் சம்பந்தப்பட்ட இஸ்ரேலும், பலஸ்தீனமும் பங்கு கொள்ளும் மாநாடு ஒன்றை நடத்துவதை விட வேறுவழியே இல்லை என்றார் இப் பிரச்சனை தொடர்பாகப் பேசுவதற்கு இஸ்ரேலிய தலைவர்கள் ஜெனிவாவுக்கு வர வேண்டும் எனவும் அவர் அழைப்புவிடுத்தார்.

## காஸா பகுதியில் கடும் சண்டை

(ஜெரூசலம்)

பலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் யாஸிர் அரபாத்தின் ஜெனிவா உரையை அடுத்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஸா பகுதிகளிலும், கோலான் மேற்குப் பள்ளத்தாக்குப் பகுதிகளிலும் இஸ்ரேலிய படைகளுக்கும் பலஸ்தீன மக்களுக்கும் இடையே கடும்சண்டை இடம் பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காஸா பகுதியில் அரபாத்தின் உரையைக் கேட்ட மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வீதியில் பாடிக்கொண்டும், நடனமாடிக் கொண்டும் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது ஊரடங்கு உத்தரவையும் மீறி இவர்கள் வீதியில் வந்ததையடுத்து இஸ்ரேலிய ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் பலஸ்தீன இளைஞர்கள் பலர் கொல்லப்பட்டனர்.

## நயினாதீவில் திருவெம்பாவை

நயினாதீவு காட்டுக்கந்த சுவாமி கோவிலில் இன்று 15-ம் திகதி முதல் 24-ம் திகதி வரையில் திருவெம்பாவை நடைபெறும் இறுதிநாள் மகா சங்காபிஷேகம் நடைபெறும்.


சமாதானம் ஜனநாயகம் சுபீட்சம் மலர
இன்றைய அவலங்களிலிருந்து மீள
மாற்று அரசை வேண்டி நிற்கும்
மக்களின் வலிமை மிக்க

ஜனாதிபதி வேட்பாளர்

# திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா

# அவர்களுக்கு

## தமிழ் பேசும் மக்களே

## ஒரு முகமாக வாக்களியுங்கள்!

15 - 12 - 88 வியாழன் காலை 9 மணிக்கு பனிப்புலம் பண்டத்தரிப்பில்
பொதுக்கூட்டம் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா சிறப்புரை ஆற்றுவார்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது)

12279

முரசொலி
தேசிய தமிழ்த் தினசரி

# போதியளவு அரிசி, மா மேலும் கப்பலில் இங்கு வருகின்றது

மேலும் தொளாயிரத்தி ஐம்பது மெட்ரிக்தொன் மா திருகோணமலையிலிருந்துநாளை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்படவுள்ளது.

இதுதவிர ஐநூற்றி ஐம்பது மெட்ரிக்தொன் அரிசி சில தினங்களில் ரயில்மூலம் கொழும்பிலிருந்து இங்குவந்து சேரவுள்ளது. இவை இங்கு வந்து சேர்ந்ததும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு உடனுக்குடன் விநியோகிக்கப்படும் என யாழ். மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். நடேசபிள்ளை தெரிவித்தார்.

## சிறைஅதிகாரிகள் வேலை நீக்கம்

நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற வெலிகடை சிறை உடைப்பு தொடர்பாக நீதி அமைச்சு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. இச் சம்பவத்தின்போது கடமையிலிருந்த சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலர் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

## கல்விக்கந்தோரின் புதிய கட்டடம்

கிளிநொச்சி பிராந்திய கல்வி அலுவலகம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் கட்டப்பட்டுவரும் புதிய மாடிக்கட்டடத்திற்கு இடமாற்றப்படவுள்ளது. ஜனவரி மாதம் முதல் புதிய கட்டடத்தில் கல்வி அலுவலகம் இயங்கும்.

### புதிய ஜனாதிபதி . .

தெரிவாகும் ஜனாதிபதி, அவசியமானுல் வேறுநாட்டுத் துருப்புகளை இங்கு அழைக்க தன்னால் முடியுமானாலும், ஜே. வி. பியினருடன் போர்புரிய எவரையும் அழைக்கத் தேவையில்லை என்றார்.

குர்க்காபடையினரை இங்கு அழைக்க தாம் விரும்பியதை ஒப்புக்கொண்ட அவர், ஆனால் இனிமேல் அந்தத் தேவை ஏற்படாது என்றும் சொன்னார்.

### தேர்தல். . .

பிரதமர் பிரேமதாஸவுக்கே வெற்றி வாய்ப்புள்ளதாகவும், தேர்தல் ஒத்திவைப்பை தாம் எதிர்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே தேர்தலில் வாக்களிக்கச் செல்பவர்கள் அந்தந்த இடங்களிலே கண்டதுண்டமாகக் கொல்லப்படுவர் என்று ஜே. வி. பி.பயமுறுத்தியுள்ளது.

## காலமானார்
### இராமலிங்கம் விஸ்வநாதன்

அளவெட்டி தெற்கு தம்மளையைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் விஸ்வநாதன் 14-12 88 புதன்கிழமை காலமாகிவிட்டார். இவர் முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியரும் (Welder), வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தின் முன்னாள் போதனாசிரியரும் (Welding), திருமதி கமலாசினிதேவியின் அன்புக் கணவரும், கமலநாதன், இராமநாதன், கமலேஸ் (இந்தியா), விஸ்வகமலம். அமரநாதன் (E.P I. Group), ஸ்ரீரங்கநாதன், விஸ்வமதி, சர்வாயுதநாதன், சிவநாதன், சிவசக்திநாதன், மணிவண்ணன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சூரியகலாவின் (நடனஆசிரியை அருணோதயாக் கல்லூரி) அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-12-88 வியாழக்கிழமை (இன்று) பிற்பகல் 2-00 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. இலட்சுமணன்

12300

## காலமானார்
### செல்வி தனபாலசிங்கம் வித்யா

உசன் மிருசுவிலைச் சேர்ந்தவரும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆண்டு 8 மாணவியும், 9-11-88இல் கச்சேரி குண்டு வெடிவிபத்தில் காயமடைந்தவருமான செல்வி வித்யா காலமாகிவிட்டார். இவர் தனபாலசிங்கம் (ஓய்வுபெற்ற அரசாங்க லிகிதர்), சோதீஸ்வரி ஆகியோரின் அன்பு மகளும், ரவிசங்கர், உதயசங்கர், சிவசங்கர் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற ஆசிரியர் சுந்தர் சின்னம்மா ஆகியோரின் பேத்தியும், சோமஸ்கந்தர் (கனடா), குலசிங்கம் (அவுஸ்திரேலியா), தங்கராசா, டாக்டர் செல்வராசா (இங்கிலாந்து) ஆகியோரின் மருமகளும் லோகேஸ்வரி ரவீந்திரனின் பெருமகளும், தங்கராசா (ராஜா கூல் பார்), தியாகராசா (உரிமையாளர் ராஜா தியேட்டர்), பத்மநாதன் (பிரான்ஸ்), தர்மராஜா (இங்கிலாந்து) ஆகியோரது பெருமகளும் பராசக்தி (பிரான்ஸ்), நித்தியலட்சுமி (பொன்னப்பா லேன், ஓட்டுமடம்), ஆகியோரின் பெருமகளும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் உசனில் அவரது இல்லத்தில் இன்று 15-12-88ஆந் தேதி வியாழக்கிழமை 2மணிக்கு நடைபெற்று உசன மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

12282
உசன் கந்தசாமி கோவிலடி,
உசன் மிருசுவில்.

தகவல்
சி. தனபாலசிங்கம்

★ குடாநாட்டுக்கு போதியளவு வந்துள்ளது

# எரிபொருட்களின் விலை மேலும் இங்கு வீழ்ச்சி

யாழ்ப்பாணத்தில் எரிபொருட்களின் விலையில் மேலும் வீழ்ச்சியேற்பட்டுள்ளது. கொழும்பிலருந்தும், அனுராதபுரத்தில் இருந்தும் பெற்றோலியம் கூட்டுத்தாபனமும். தனியாரும் போதியளவு எரிபொருட்களை இங்கு தருவித்து வருவதையடுத்தே இந்த விலைவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

நேற்று யாழ்நகரில் பெற்றோல் லீற்றர் பதினெட்டு ரூபாவாகவும், டீசல் லீற்றர் பத்து ரூபாவாகவும், மண்ணெண்ணை லீற்றர் ஒன்பது ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டது. நகரில் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்டளவில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணை என்பன விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

சில தினங்களில் மேலும் ஒரு தொகை பெற்றோல், டீசல், மண்ணெண்ணை என்பன பெற்றோலியம் கூட்டுத் தாபனத்தினால் ரயில்மூலம் இங்கு தருவிக்கப்படவுள்ளன. இதனால் அடுத்த சில தினங்களில் எரிபொருட்களின் விலையில் மேலும் வீழ்ச்சிஏற்படுவதோடு தட்டுப்பாடற்ற நிலையில் பெறக்கூடியதாகவிருக்குமெனவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## போதியளவு முத்திரை வந்தது

கொழும்பிலிருந்து போதியளவு முத்திரைகள் யாழ். பிரதம தபால் அலுவலகத்தை வந்துசேர்ந்துள்ளது. இந்த முத்திரைகளில் கணிசமான அளவு ஏனையதபாலலுவலகங்களுக்கும், உபதபால் அலுவலகங்களுக்கும் பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளன. இதனால் குடாநாட்டில் முத்திரைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

### வாக்களிப்பு...

மாவட்டங்களிலும் இம்முறை 467 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. இதில் ஐம்பதி மூன்று வாக்குச் சாவடிகள்கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படும்.

1982-ம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலின்போது அமைக்கப்பட்ட வாக்குச் சாவடிகளைவிட இம்முறை 37 சாவடிகள் கூடுதலாக அமைக்கப்படுகின்ற போதிலும் இவை 160 பாடசாலைகளில் (நிலையங்களில்) மட்டுமே அமையவுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### பாராளுமன்றத். . .

கிறது. மக்களின் நாளாந்த வாழ்க்கை சீரழிந்துள்ளது கடந்த காலங்களில் வடபகுதியில் கட்டவிழ்த்துவிட்ட அடக்கு முறைகளும், அடாவடித்தனங்களும் தென்னிலங்கை மக்களை நோக்கி திசை திருப்பப்பட்டுள்ளது. இதனால் முழு மக்களும் அடுத்து என்ன நடக்குமோ எனப் பீதியடைந்த நிலையிலேயே வாழ்ந்துவருகின்றனர்.

இச்சூழ்நிலையில் மலையக மக்களுக்கு இம்முறை வாக்குரிமை அளிக்கப்பட்டிருப்பதால் அங்கும் தேர்தற் பரபரப்புகளைக் காணமுடிகின்றது. வடக்குக் கிழக்கு மாகாணசபைத் தேர்தலிற் போட்டியிட்டுப் பெருமளவுக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர்கள் என்பதாலும், பாசிசவாதிகளுக்கும், சந்தர்ப்பவாதிகளுக்கும எதிராக முற்றிலும் மக்களின் நலன்களின் பக்கம் நின்று பல போராட்டங்களை நடாத்தியவர்கள் என்னும் உரிமையுடனும் ஈழமக்கள் புரட்சிகர முன்னணி வரவுள்ள பொதுத் தேர்தலில் எல்லாத் தொகுதிகளிலும் போட்டியிடத் தீர்மானித்துள்ளது. இதற்குத் தமிழ் பேசும் மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவார்கள் என்னும் நம்பிக்கை எமக்குண்டு'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் சுமுக சூழ்நிலையை உருவாக்க முன்வர வேண்டும்

''வடக்குக்கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் மூலம் மாகாண அரசைக் கைப்பற்றிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அரசின் தலைமை செயலகத்தை திருமலையில் நிறுவத் தீர்மானித்திருப்பதையும், தேசிய ஐக்கியத்திற்கு ஒரு முன்மாதிரியாகவும், திருமலை வாழ் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும், வரவேற்கத்தக்க வகையில் மாகாண அரசு அமைப்பது கண்டு ஜீரணிக்க முடியாத அரச சக்திகள் மக்கள் மீது தாக்குதல்களை மேற்கொள்ள முற்படுகின்றன.

இத்தகைய ஒரு சம்பவத்தில் ரெலோ, ஈ. என். டி. எல். எப்., ஈ பீ. ஆர். எல். எப்., இந்திய சமாதானப் படை, பொதுமக்கள் உட்பட 12 பேர் இறந்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மாகாண அரசும், இந்தியசமாதானப்படையும் துரித கதியிற் செயற்பட்டு, சுமுகமான சூழ்நிலையை உருவாக்க முன்வர வேண்டும். தவறின் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும்'' என்று மேற்படி முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

### வேட்பாளர்கள்...

போட தம்மால் முடியுமென்று இங்கு தெரிவித்த ஆணையாளர், மூன்று வேட்பாளர்களும் சம்மதித்தால் தேர்தலை பின்போட முடியுமென்றார்.

### குண்டுவெடிப்பில். . .

மாணவியுமான வித்யா தனபாலசிங்கம் (13) என்பவரே நேற்று முன்தினம் மரணமானவராவார். இவரையும் சேர்ந்து இச்சம்பவத்தில் மரணமானவர்களின் தொகை ஐந்தாக அதிகரிக்கின்றது.

### 150 மில்லியன். . .

மில்லியன் ரூபாவும் நாளையுடன் வழங்கப்பட்டுவிடும்.

மிகுதி எழுபத்தைந்து மில்லியனையும் அடுத்த இருவாரத்துக்குள் வழங்கி முடிக்க ஏற்பாடாகியுள்ளது.

## அரசாங்க அறிவித்தல்
### சனாதிபதித் தேர்தல், 19 டிசம்பர் 1988.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்றும் சகல அரச சேவை அலுவலர்களின் கவனத்திற்கு, (ஆசிரியர்கள் உட்பட)

எதிர்வரும் 19-12-88-ம் திகதி நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலிலே கடமையாற்றுவதற்காகிய உங்கள் நியமனக் கடிதங்கள் யாவும் உங்கள் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தயவு செய்து உங்கள் அலுவலகங்களுக்குச் சென்று உங்கள் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு தவறாது, அக்கடிதங்களிலே குறிப்பிட்டபடி டிசம்பர் 18-ம் 19-ம் திகதிகளில் உங்கள் கடமைகளுக்குச் செல்லவும்

நியமனக் கடிதங்கள் உங்களுக்கு (ஆசிரியர்கள் உட்பட) கிடைக்காவிட்டாலும் வாக்கெடுப்பு நிலையங்களிலே சிரேட்ட தலைமைதாங்கும் அலுவலர்களாகவும், கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்களாகவும் எழுதுவினைஞர்களாகவும் கடமைபுரியத் தகுதிவாய்ந்த அரச அலுவலர்கள் யாவரும் தயவுசெய்து 17-12-88-ம் திகதி சனிக்கிழமை மு ப 8-00 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அருகாமையில் அமைந்துள்ள வை. எம் சி. ஏ. கட்டிடத்திற்கு வருகைதரவும்.

இத்தேர்தலிலே கடமையாற்றவிருக்கும் சிரேட்ட / கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கும், வாக்கெடுப்பு எழுதுவினைஞர்களுக்கும அவர்களுடைய கடமைகள்பற்றி விளக்கும் அறிவுரை வகுப்புகள் இம்மாதம் 15-ம், 16-ம், 17-ம் திகதிகளிலே மு. ப. 9-30 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் 'புனித ஜோன் கல்லூரியிலே' நடைபெறுகின்றன. இவ் வகுப்புகளுக்கு தவறாது சமுகமளிக்கவும்.

உங்களுக்கான போக்குவரத்துச் செலவுகள் கொடுக்கப்படும்.

சந்திரானந்த த சில்வா,
தேர்தல் ஆணையாளர்.

14-12-1988.

12301

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ, இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகப் பிரிவில் 15.12.88 ல் அச்சிட்டு வெளியிடப்பெற்ற து.